**ஜூலை - 26**

**"ஜெயங்கொள்ளுகிறவனுக்கு நான்... வெண்மையான குறிக்கல்லையும், அந்தக் கல்லின்மேல் எழுதப்பட்டதுமான அதைப் பெறுகிறவனேயன்றி வேறொருவனும் அறியக்கூடாததுமாகிய புதிய நாமத்தையும் கொடுப்பேன்." - வெளி 2 : 17.**

ஜெயங்கொள்ளுகிறவர்கள் எல்லோரும் எல்லாவற்றையும் கர்த்தருக்காகத் தியாகம் பண்ணுகிறவர்களாகவும், கர்த்தருடைய அன்பையும், தயவையும் தங்களில் நிலைக்கச் செய்ய, அவசியமானால் மற்ற எல்லாவற்றின் அன்பையும், ஐக்கியத்தையும் அனுமதியையும் தியாகம் பண்ணுகிறவர்களாகவும் நிரூபிக்க வேண்டும். கர்த்தருடைய பிரதிஷ்டை பண்ணின ஜனங்களை இந்தச் சோதனை ஒவ்வொரு நாளும் நெருங்கி வருகிறதென்பதை நம்புகிறோம். இது நம்முடைய சோதனையின் அம்சங்களில் ஒன்றாயிருக்கிறது என்றும், அதற்கேற்ப நம்முடைய பற்றுதல்களை பரத்துக்கடுத்த காரியங்கள் மேல் வைக்கவும் நம்முடைய பற்றுதல்கள் ஊழியங்கள் முதலியவைகளில் நமது கர்த்தரோடு போட்டியிடுவதற்குக் காரணமாயிருக்கிற பூமிக்குரிய ஜீவிகள் சார்பாகவும் காரியங்கள் சார்பாகவும் உள்ள அப்படிப்பட்ட எல்லா பற்றுதல்களையும் அழிக்கவோ, அல்லது உணர்வற்றிருக்கச் செய்யவோ நாம் ஒவ்வொரு நாளும் ஞாபகப்படுத்திக் கொள்ளுவது நமக்குத் தகுதியாயிருக்கிறது. **- Z '99, 140 (R 2479)**

பாவத்தையும், வஞ்சகத்தையும், சுயநலத்தையும், உலகத்தையும் ஜெயிக்கிற ஒருவனே ஜெயங்கொள்ளுகிறவனாவான். இவைகள் அவனுக்கு எதிராக சாத்தானாலும், உலகத்தாலும், மாம்சத்தாலும் போருக்காக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. இப்படிப்பட்டவன் உண்மையாகவே தேவனுடைய ஆலயத்தில் ஜீவனுள்ள கற்களாக வைக்கப்பட்டு அதைப் பெற்றுக்கொள்ளுகிறவனேயன்றி வேறொருவனும் அறியக்கூடாததும் அல்லது உயர்வாக மதிக்கக் கூடாததுமான அவ்வளவு பெரிய சுபாவமாகிய தெய்வீக சுபாவத்தைப் பெற்றுக் கொள்ளுவான். **- P '34, 95.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**சங் 73:24; ஓசி 12:6; மத் 24:13; யோவா 8:31; 10:28; அப் 11:23; ரோம 2:6,7; 8:30-39; 1கொரி 16:13; கலா 6:9; கொலோ 1:10,22,23; எபி 2:1;3:6,14; 10:23,35,36; 12:1-15; யாக் 1:4,12; 1பேது 1:4-8; 2பேது 1:10,11; வெளி 2:7,10,11,25-28; 3:5,11.**

**கோபுர வாசிப்பு : Z '12, 315 (R 5113)**

**வினாக்கள் : இந்த வாரத்தில் நான் ஜெயம் பெற்றிருந்தேனா? எப்படி? எந்த முறையில்? பலன்கள் என்ன?**